# மாவட்ட செயலகம் - அம்பாறை

# 2021 ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 2021 வருடத்திற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும்பொருட்டு பதிவுளை செய்ய எதிர்பார்க்கும் தகைமைகளை உடைய வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்ப படிவங்கள் கோரப்படுகின்றன.

**பகுதி - I**

| தொகுதி இல | பொருட்கள் - விபரம் | | |
|---|---|---|---|
| G-1 | அலுவலக,பாடசாலை தளபாடங்கள் | G-14 | கல்விசார் உபகரணங்கள் |
| G-2 | அலுவலக உபகரணங்கள் | G-15 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-3 | அலுவலக காகிதாதிகளும், எழுதுகருவிகளும் | G-16 | இசைக் கருவிகள் |
| G-4 | புத்தகங்களும்,பருவ வெளியீடுகளும் | G-19 | விவசாய பொருட்கள் |
| G-5 | கட்டடப் பொருட்கள் | G-20 | உரவகைகள், விவசாய இரசாயனப் பொருட்கள் |
| G-6 | கட்டட பிரிவிடுதலும் (Portioning) அலங்காரமும். | G-21 | விவசாய விதைகள், நடுகைப் பொருட்கள் |
| G-7 | மின் உதிரிகளும், பொருத்திகளும் | G-22 | கால்நடைகளின் உணவுகள், மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்கள் |
| G-8 | கணனிகளும், உதிரிகளும் | G-23 | கைத்தொழில் சம்பந்தமான மூலப்பொருட்கள் (நூல், சாயம் போன்றவை) |
| G-9 | சமூக நலன் பொருட்கள் | G-24 | கால்நடைகளும்,கால்நடை உபகரணங்கள் |
| G-10 | மின் உபகரணங்கள் | G-25 | மீன்பிடி தொடர்பான பொருட்கள் |
| G-11 | தொடர்பு சாதனங்கள் | | |
| G-12 | மோட்டார் வாகான உதிரிப்பாகங்கள் | | |
| G-13 | பொது மற்றும் வீட்டுப் பாவனை உபகரணங்கள் | | |

| தொகுதி இல | சேவைகள் - விபரம் |
|---|---|
| S - 1 | கடிதத்தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகள், அச்சிடுதல், சுவரொட்டிகள், பாதாதைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல் இறப்பர் முத்திரை, திகதி முத்திரை தயாரித்தல். |
| S – 2 | அலுவலக மற்றும் பாடசாலை தளபாடங்கள் திருத்தம் செய்தல். |
| S – 3 | அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், டைப்ரைட்டர்கள், ரோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும். |
| S – 4 | கணனிகள், பிரின்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும். |
| S – 5 | குளிரூட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும். |
| S – 6 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல். |
| S – 7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டட தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல். |
| S – 8 | **வாகனம் பழுது பார்த்தல்:-** இயந்திர மின் இணைப்பு (Circuit) களை பழுது பார்த்தல், தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும், பெயின்ட் அடித்தலும், டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள் பழுது பார்த்தல், குளிரூட்டிகள் பொருத்துதலும் பழுது பார்த்தலும், வாகனங்களின் இருக்கை குஷன் கவர் அமைத்தலும். |
| S – 9 | **வாகனம் பராமரித்தல்:-** கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு பரிசீலித்தல், (Alignment) சில்லு சமன் செய்தலும், டயர் மாற்றம் செய்தலும் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். |
| S – 10 | வாகனங்கள் மற்றும் நிர்மாண சேவை இயந்திரங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கல். |
| S – 11 | **ஏனைய சேவைகள்:-** சமைத்த உணவுகள் மற்றம் சிற்றுண்டி வழங்கல் மற்றும் மேலதிகமான சேவைகள். |
| S - 12 | **தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவைகள்:-** ஆவணப்படம், வலைத்தள மேம்பாடு. |

## பகுதி - II

**ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்**
**ஒப்பந்ததாரர்களை பதிவு செய்து கொள்வதற்குரிய தகமைகள்** :-

1. CIDA நிறுவனத்தில் நிருமாணதாரர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் ரூபா 10,000,000/= (ரூபா பத்து மில்லியன்) வரையிலான சிறிய ஒப்பந்த வேலைகளின் பொருட்டுத் தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தகுதியுடையோராவர். அத்துடன் பதிவு செய்து கொண்டுள்ள சங்கங்கள் ரூபா 2,000,000 (ரூபா இரண்டு மில்லியன்) பெறுதியான ஒப்பந்த வேலைகளை செய்யும் தகுதியை கொண்டிருக்கும்.
2. தகமைகளையும் உடைமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (அவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
3. நிர்மாண வேலைகளுக்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒப்பந்தத்தாரர்கள் மீள் அளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்பட்ட வைப்பு தொகையினை **"மாவட்ட செயலாளர் நிதி பிரிவு மாவட்ட செயலகம் - அம்பாறை"** எனும் பெயரில் உள்ள **7042024** எனும் இலங்கை வங்கி கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும். வைப்பிடலப்பட்ட பணத்திற்கான வைப்புச் சீட்டு விண்ணப்ப படிவத்துடன் இணைத்து................................ ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக **"மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம் - அம்பாறை"** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2021 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்"** என குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல வேண்டும்.
4. விண்ணப்பப்படிவமும் பதிவு செய்தலும் - பதிவுகளை மேறகொள்வதற்கு மீளளிக்கப்படாத கீழ்காணும் தொகைகளை செலுத்துதல் மூலம் முன் தகைமையினை (Pre-Qualification) உறுதிப்படுத்துவதற்கான படிவத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

விண்ணப்படிவம் மற்றும் பதிவுகள் - பதிவுகளை மேற்கொள்வதற்கு மீண்டும் செலுத்தப்படாத கீழே குறிப்பிடப்படும் தொ கையினை மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிற்கு வரவு வைத்து முழுமையான தகைமையினை (Pre-Qualification) உறுதிப்படுத்தும் மாதிரிப் படிவத்துடன் அதற்கான பற்றுச்சீட்டினையும் இணைத்து அனுப்ப வேண்டும்

| ஒப்பந்த தொகை | பதிவு கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000 க்கு அதிகமானதும் ரூபா 5,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000 க்கு அதிகமானதும் ரூபா 10,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 5,000 |

**பொதுவான நிபந்தனைகள்**
**வழங்குநர்களை பதிவு செய்தலுக்குரியவை**

1. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   a) வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி.
   b) கம்பனிப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி.
   c) உணவு வழங்கல் சேவையாயின் குறித்த பகுதிக்குரிய PHI/MOH அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட சான்றிதழின் பிரதி.
   d) சம்மந்தப்பட்ட வியாபார அனுபவம் மற்றும் பிரதான வாடிக்கையாளர்களின் விபரம்.
   e) வாகன திருத்தம் மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்யும் போது அம்பாறை பிரதம மோட்டார் வாகன பரசோதகரின் சிபார்சுக் கடிதம்.

2. இவ்வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவு செய்தலானது 2021 ஆம் ஆண்டுக்கு மட்டும் செல்லும்படியாகும். பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள்/ ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைமனு கோரப்படும். எனினும் ஏனையவர்களிடமும் விலைமனு கோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு உண்டு.

3. விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்பட்ட தகவல்களில் பிழைகள் ஏதும் காணப்படுமாயின் அத்தகைய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

4. பெறப்படும் விண்ணப்பப்படிவத்தினை காரணமெதனையும் முன்வைக்காது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ மாவட்ட செயலாளருக்கு உரிமை உண்டு.

5. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் / ஒப்பந்ததாரர்கள் விலை மனு கோரப்படும் போது அதனை கருத்தில் கொள்ளாது விட்டாலோ அல்லது உரிய காலத்தினுள் பொருளினை வழங்க அல்லது வேலையினை நிறைவு செய்யாது விட்டாலோ அல்லது வழங்கப்பட்ட மாதிரி அல்லது நிபந்தனைகளை ஒத்துப்போகாமல் விட்டாலோ அத்தகைய வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்கள் எதிர்காலத்தில் விலைமனு கோரப்படும் போது கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

6. வியாபாரம் பதிவு செய்யப்பட்ட தன்மை அல்லது அத்துடன் தொடர்புபட்ட பொருட்கள் சேவைகளுக்கே வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ள முடியும்.

7. பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ரூபா 2,000,000 (இரண்டு மில்லியன்) க்கு மிஞ்சாத ஒப்பந்தங்களை பொது நிதி சுற்று நிருப இல.01/2012 ற்கு அமைவாக பெற்றுக் கொள்ள முடியும்.

8. வாகான சுத்திகரிப்பு பராமரிப்புக்காக பதிவு செய்யும் வழங்குநர்கள் தேவையான அடிப்படை உபகரணங்கள் மற்றும் வசதிகளை உறுதிப்படுத்தும் விபரங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. வழங்குநர்களுக்கு முற்பணங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

10. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டோ அல்லது எமது இணையதளத்திலோ அல்லது முத்திரையிடப்பட்டு சுயவிலாசம் எழுதப்பட்ட கடித உறையை அனுப்புவதன் மூலமோ பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் வியாபார பதிவு சான்றிதழ் பிரதி, உள்ளூராட்சி சபையில் பெறப்பட்ட வியாபார அனுமதி பிரதி (கடந்த வருடத்திற்குரியது) என்பவையும் இணைக்கப்பட்டு 2020.12.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம் - அம்பாறை" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2021 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்"** என குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

11. மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 500/= இனை **"மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம் - அம்பாறை"** எனும் பெயரில் உள்ள **7042024** எனும் இலங்கை வங்கி கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும். வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சீட்டு விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

12. 2020.12.20 முடிவுத் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

13. மேலதிக விளக்கங்களுக்கு **ampara.dist.gov.lk** என்ற இணையதளத்திற்கு **"மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம் - அம்பாறை"** அலுவலகத்துடன் தொலைபேசி இல .063-2222037 மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

# மாதிரி விண்ணப்பப் படிவம்
## 2021 ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்
## அம்பாறை மாவட்ட செயலகம்

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :-
2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-
3. தொலைபேசி இலக்கம் :- தொலைநகல் (Fax) இல :-
4. வியாபார பதிவு இலக்கம் :-
   (பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
5. வியாபாரத்தின் தன்மை :-
6. பதிவு செய்யப்பட வேண்டிய பொருட்கள் / சேவைகளின் தொகுதி :-

| **தொகுதி இல** | **பொருட்கள் / சேவைகள் விபரம்** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

7. வங்கியாளர்களின் பெயர்கள் :-
8. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :-
9. வழங்கல் செய்யக்கூடிய பிரதேசங்களின் பெயர்கள் :-
10. பெறுமதி சேர் வரி பதிவு இல. (இருப்பின்) :-
11. மின்னஞ்சல் முகவரி :-

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும் அம்பறை மாவட்ட மாவட்ட செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் சேவைகள் வழங்குவதற்கும் உறுதியளிக்கின்றோம். பதிவுக் கட்டணம். ரூபா......................................., .............................................. ஆம் திகதி .........................................., இலங்கை வங்கி கிளையில் வைப்புச் செய்து அதற்கான வைப்புச் சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

..................................................  ........................................................  ...............................................

விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி
(உத்தியோக பூர்வ முத்திரை)